97. அனைவருக்கும் மருத்துவ சேவையை நல்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒரு முழுமையான பொதுக் காப்பீட்டுத் திட்டத்தைப் புதிதாக அறிமுகப்படுத்த உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி, "முதலமைச்சரின் விரிவான பொது மருத்துவ காப்பீட்டுத் திட்டம்" என்ற மேம்படுத்தப்பட்ட இப்புதிய திட்டம் விரைவில் தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய அரசு செயல்படுத்திய திட்டத்தில் இருந்த குறைபாடுகள் இந்தப் புதிய திட்டத்தில் நீக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் ஓர் ஆண்டிற்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் காப்பீடாக நான்கு ஆண்டுகளுக்கு வழங்கும் வகையிலும், காப்பீட்டுக் காலம் மேலும் ஓர் ஆண்டிற்கு நீட்டிக்கத்தக்க வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஒரு சில நோய்களுக்குக் காப்பீட்டு வரம்பு ஒன்றரை இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் இத்திட்டத்தின்கீழ் மருத்துவ சிகிச்சை முறைகள் அதிகரிக்கப்பட்டு குறிப்பாக மருத்துவப் பராமரிப்புக்கும், குழந்தைப் பிறப்புக்குப் பின் தேவைப்படும் சிகிச்சைகளுக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளன. இப்புதிய திட்டத்தின்கீழ் அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவ வசதிகள் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-40

வருவாய் நிருவாகம்

98. ஒவ்வோர் ஆண்டும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை ஒட்டி இலவச வேட்டி-சேலைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்மூலம் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் பயன்பெறுவதோடு அல்லாமல், கைத்தறி, விசைத்தறித் தொழில்களில் ஈடுபட்டுள்ளோருக்கும் வேலைவாய்ப்பு உருவாக்கப்படுகிறது. வரும் 2012 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளையொட்டி 159.04 இலட்சம் சேலைகளும், 158.19 இலட்சம் வேட்டிகளும் பயனாளிகளுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக, 2011-2012 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 269 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

99. தஞ்சாவூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகமும், அம்மாவட்டத்தின் பிற துறை அலுவலகங்களும் கொண்ட புதிய வளாகம் ஒன்று 25 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருப்பூர்